~~1554~~ 15553

S.V. சுப்பையா பாகவதர் & S.G. கிட்டப்பா
மிஸ். K.B. சுந்தராம்பாள் பாடி வரும்
(ஒரிஜினல் புதிய பிளேட்)
கிராமபோன் பாட்டுகள்

31 MAR 19..

விலை அணா 8 (5) பாகம் அடங்கிய

விலை சதம் 50 (5) பாகம் அடங்கியது

... ப்பா, புதுமண்டபம், மதுரை.
... 1932. [விலை அணா 8.
... லாஸ் பிரஸில் பதிப்பிக்கப்பெற்றது.

ம - 12
N32
147877

உ

ஸ்ரீமுருகன் துணை.

31 MAR 1932

கிராமபோன் வித்வ சிரோண்மணிகளாகிய

S. V. சுப்பையா பாகவதர், S. G. கிட்டப்பா, மிஸ் K. B. சுந்தராம்பாள், பபூன் N.S. ஷண்முகம் கபிலவாய் ராமநாத சாஸ்திரி, ஆர்மோன்யம் T. M. காதர்பாக்ஷா & A. S. ராஜப்பா, மிஸ் S. R. கமலம் இன்னும் மற்ற பிரபல வித்வான்களும் பாடிவரும் மாஸ்டர்வாய்ஸ் & கொலம்பியா கம்பெனிகளின் ரிக்கார்டுகள் அடங்கிய

ஒரிஜினல் புதிய பிளேட்

கிராமபோன் பாட்டுகள்.

(முதற் பாகம்)

பிளேட் சங்கீத ரத்னம்

S. V. சுப்பையா பாகவதர் அவர்கள் பாடிவரும்

இராகம்-பைரவி — தாளம்-ஆதி.

பிளேட் No. 1752 பல்லவி-

ஜய ஜய கோ குல பாலா

ஜய சகலா கம மூலா (ஜய)

r-600 008

அநுபல்லவி.

தயபா மாம் கோ பா லா தீனம்
பாலய பாலா (ஜய)

சரணம்.

தேவ மயா சரித மிதம்
தீன தயா அபராதம்
ஸ்ரீவசுதா திபக்ருபையா
கே வல மி அநு னுஹி (ஜய)

ஈக்ஷித பகதேஹே
ஈ சகஜம் திநிநீஹே
வீசாக்ஷி சத மோஹே
வேதாம்தா கமகே ஹே (ஜய)

ஜக தண்ட கோடிதனே
ஐந்து ரந்த ரசு தனே
சுக நிக சம் ஜாத மனே
அபிரிமி தாஸ் ருத தேனே (ஜய)

1917
784·0954

பிளேட் No. 2742.

இராகம்-ஹரிகாம்போதி—தாளம்-ஆதி.

பல்லவி.

பூங்கா வினோதமே புகலவொண்ணாப்ரமாதமே (பூ)

மகுடங்கள்.

புத்திக்கும் எத்திக்கும் வினைமிது
சித்திக்கும் நத்திக்கும் அதிசுக (பூ)
பொங்கும் எங்கும் பரிமளம்
மெங்கும் தங்கம் அதிசுக (பூ)
பொன்னுலகம் தன்னிலுரை அமரரும்
இன்னிலம் வாழ் மன்னர்களும் தினம் புகழ் (பூ)
பூரிக்குமே விப காரிக்குமே நவ
சரிக்கு மேசுகம் பாரிக்குமே யின்ப (பூ)
புனிதப் படுமலர் இனிதுக்கிடமுயர்
முனிதற் கருதவும் கனிதர்க்கதிநவ (பூ)
காதலித்தினி மே சுகித்திட
மே மிகுத்திடு வாசை வைத்திடு (பூ)

அநுபல்லவி.

பாங்கான சோலை காக்ஷி
பற்பல வற்புத கற்பக நீதமே (பூ)

சரணம்.

நீங்கா திரவு பகல் நின்று குளிர்ந்திடு
தென்றலும் வீச
நிபுனப்பிர சங்கியைப்போல் நெஞ்சுரு மிஞ்சிய
கிஞ்சுகம் பேச

தீங்குயில் பாட மயிலாட நல்சித்தன நர்த்தன
மெத்த வுல்லாசம் தேர்ந்த மாக்கொத்திகள் (பூ)

கொலம்பியா G. E. No. 31

பவளக்கொடி சரித்திரம்.

இராகம்-செஞ்சுருட்டி—தாளம்-ஆதி.

பவளக் கொடியின் மீதிலாசை மறப்பேனோ நானே
அந்த பவளக்கொடி
மறப்பேனோ நானே மாயபிரானே
மார்க்கமொன்று சொல்ல நீர்
மயங்குது சரியல்ல அந்த
மாதாசி மீதிலாசை மறப்பேனோ நானே (பவ)

கண்ணபிரானே இது
புண்ணியந்தானே
எண்ணுதலேனே நான் (பவ)

அவலே சத்தாலே அதிர்ஷ்டம் மென்மேலே
அரும்பவளம் கொள்ள இதில்
அருமையது வல்ல அந்த
காமியாசை மறப்பேனோ நானே (பவ)

அவளன்றி யேது இப்புவியில் கிட்டாது
அழகென்ற போது
அருள்வா யிப்போது—அவலே சத்தாலே (பவ)

கொலம்பியா G. E. No. 18

இராகம்-குறிஞ்சி—தாளம்-ஆதி.

பல்லவி.

யுவதி ஸ்ரீமதி மாரதியே ஓ
பூஷணி பூண்ட பெண்மணி தருணி

அநுபல்லவி.

புவன சிங்கார மகா
பூவையே நாயகியே
பூததிபெற்ற புனிதவனித யுவதி

(டி பிளேட் பின்புறம்)

பஞ்சத்தால் வடமதுரை பாழாக தங்கை யேழு
பாலரோடு
கொஞ்சத்தில் இல்லை அவள் படும்பாடு சோலமதாய்
நெஞ்சாத்துக் கனவு கண்டேன் கிளியே மானே
இங்கு வந்த தங்கை எங்கே
அவள் எங்கே
எங்கே
எங்கே
அவள் பஞ்சத்தாலேழு பாலரோடு
இங்கு வந்த தங்கை எங்கே
எங்கே
எங்கே

சங்கீத ராணி

மிஸ் K. B. சுந்தராம்பாள் பாடிவரும்

கொலம்பியா No I.

இராகம்-தேவகாந்தாரி—தாளம்

தக்கோர் அபிமான
ஞான சீலன்
சகல புவன ரக்ஷகன்
காருண்ய கமலன்
எக்காலத்திலும் உந்தன்
பொற்றாள் பணிந்து
இருக்க வரமருள்வாய்
கந்தமூலபிரான்
பந்தமானைப் பாடி (தக்)

இராகம்-பியாகு—தாளம்-ஆதி.

கண்ணிகள்.

சுப்—நாரதரே யம் மாதவள்தன் பேர்
யாதுரை செய்வீர் •தீதணுகாமல் (நா)

நா—ஊரது சிற்றா ராகிடுங் கேளீர்
பேரது வள்ளி யென்பார்கள்(ஊர்)

சுப்—சுந்தரி யாளின் தந்தையும் யாரோ
அந்த நங்கைசெய் யுந்தொழிலேதோ (சுந்)

நா—வனக்குற வேட ராஜனின் மகள்
தினப்புனக் காவல் தினஞ் செய்கிறாள்(வன)

சுப்—சென்றிடிலோ யான் கொண்டிடு மோகம்
கண்டறிவார்களோ விண்டிடுவீரே (செ)

நா—ஜெனித்த நமக்கே தெரிந்திடுவீர்
வனத்திலினித்தான் மணந்திடுவீர் (ஜெ)

இராகம்-கமாஸ்—தாளம்-ஆதி.

வள்ளி.

ஆலோலம் என்று கூவினாள்
தினைப்புனத்தில் (ஆலோல)
பரண்மீதேறி (ஆலோல)

அநுபல்லவி.

பாலோ சுவை சே ரமுதாலோ
மதித்ததிந்த பைந்தொடியாளிவள்
இசைநலமே • இந்துவதனமுள்ள எழில்சோபிதமே (ஆ)

கடகாகரங்கள் மின்னவே சோ! சோ!!
எனும் சொல்கனி வாய்தொடர்ந்து சொல்லவே
கமலமலரை நிகரும் பழமை நிலவிய
கனகமணி பணிகள் எழிலொடு பழகிய (ஆ)

கதித்த வீணை தானென உவமை உரைக்க
கவணெறிந்து பாண்
தணி சிறந்து மகிழ்வாய்
மனதுவந்து மதிமயங்கி விரைவாய் (ஆ)

வடுகு கன்னடம் மலேயாளம் முதல் திராவிடம்
மதித்த வேதத்தினி யவள் போலே
புனிதமான கியா னேஸ்வரியை
காண காணேன் இனியவளே (ஆ)

சங்கீத ராணி

K. B. சுந்தராம்பாள் பாடிவரும்

பிளேட் No. P. 46335.

சுப்பிரமணியர் கீர்த்தனம்.

இராகம்-காபி—தாளம் ஆதி.

பல்லவி.

பன்னிருகை வேலனடி பாலசுப்பிர மண்யனடி
எட்டிக்குடி வேலனடி என் ஐயன்
அப்பன் சுப்பையன் முருகன்
ஏழையைக் காக்கும் போதனடி

சுப்பிரமணியர் வள்ளிநாயகியைக் கண்டு

வனத்தினில் பாடிவரும்.

பிளேட் No. P 4633.

இராகம்-காபி—தாளம்-ஆதி

பன்னிருகை வேலனடி பாலசுப்ர மண்யனடி
பாலைபரமேஸ்வரிக்கு வந்துதித்த மைந்தனடி
மாடேர்வன் மைந்தனடி மாமன் திருடனடி
வேடர் துரத்திவர வேங்கைமர மானனடி
ஆனைக்கிளையோனடி ஆறுமுக வேலனடி
சேனைத்தலைவனடி சிவசுப்ரமண்யனடி

சங்கீத ஸ்வர மாஸ்டர்

S. G. கிட்டப்பா பாடிவரும்

கொலம்பியா L B. E. No. 8.

பல்லவி.

மாதரசே மயிலே ஆசை (மாத)

அநுபல்லவி.

மௌன மாகுமோ குயிலே ஆசை (மாத)
நீதயவு புரிவாய் இனி (நீதய)
எந்தன் நேரிலேயே வருவாயே ஆஹா (மாத)

மா மலரா ளேனையே முனம்
மா மலரா ளேனையே பொல்லா (மாம)
அம் மதவேள் செயு
வே தனையே சகியே எந்தன்
கோமளமே மகிழ்வாய் எனைக்
குலவச் சமயம் வருவாயே ஆசை (மாத)

ஷையார் பாடிவரும்

L. B. E. No. 8.

இராகம்-கமாஸ்—தாளம்-ஆதி.

காமி சத்யபாமா கதவைத் திறவாய் (காமி சத்)
திறவாய்
திறவாய்
திறவாய் எந்தன் (காமி சத்)

அநுபல்லவி.

பூமி புகழ் நேயன் புழுதியடைந்த வாயன்
நேமி வசந்தன் நானடி
நானடி
நானடி
நானடி எந்தன் (காமி சத்)

அக்ரமங்கள் செய்திடும் அசுரரை யழித்திடும்
சக்ரதரனும் நானடி
நானடி
நானடி
நானடி எந்தன் (காமி சத்)

டிஷ் பிளேட் பின்புறம்

இராகம்-கமாஸ்—தாளம்-ஆதி.

தாமதமேன் தாளே நீ திறவாய்
ததி நீ தயவாய்
தாளே நீ திறவாய் (தாம)

கோமள மயிலினமே கொஞ்சிடு மடவனமே
கூறு ஞாய மோதினமே குணவதி
கோதையழகி
அதிவினயகோ
லமதிசய கோ
மதி குண கோ
தையழகியே. (தாம)

பபூன் N. S. ஷண்முகம் அவர்கள் பாடிவரும்

பிளேட் C. S. E. 34 காமிக்

சீமை சிலுக்கு காரி இந்த
ஜெகத்தை துலக்கு நாரி பாரி (சீமை)

ஜாம பொழுது பேச்சு உன்
சத்தியம் பொய்யாச்சு நான்
ஏமாளியோ ஏச்சு இன்னம்
ஏனடி கைவீச்சு (சீமை)

அட்டிகை காசுமாலே அழகான வைரவோலே என்
பெட்டியிலிருப்பதாலே கண்ணே கொஞ்சம்
பேசடி ரதிபோலே மேலே (சீமை)

சபை மெச்சும் விகடநாடக திலக
பபூன் ஷண்முகம் பாட்டு கிராம்போன்
பிளேட்டில் கொடுத்த பிரக்யாதியை கேட்டு
பாடி தாளம் போட்டு நல்லச்
சுபச்சங்கதி கேட்டு மாலைச்
சூட்டடி இதே ரிக்கார்டுக்கு (சீமை)

வித்வ சிரோண்மணிகளாகிய

S. V. சுப்பையா பாகவதர்,
அனந்த நாராயண அய்யர், செல்லப்பா அய்யர்,
S. G. கிட்டப்பா அய்யர், ஆர்மோன்யம்
K. S. தேவுடு அய்யர் இவர்கள் மீதில்

கோலம்பியா பிளேட்டில்

பபூன் N. S. ஷண்முகம் பாடிவரும் பாட்டு.

C. E 47 காமிக்

ஆசை கண்ணாட்டி என்
அருமை பெண்டாட்டி (ஆ)
பாசம் புகழ்ந்தவண்டி
வடிவம் வாய்ந்தவண்டி (ஆ)
தேசம் புகழ்ந்த வண்டி
சிங்காரமான வண்டி (ஆ)

(பாட்டு)

கிராம்போன் பிளேட்டில் எங்கும்
கீர்த்தியுடன் பேர் துலங்கும்
சங்கீத ரத்னமே சுப்பையா பாகவதர்
துணைக்கி நானு வேன்
அரமனைக்கி உள்ளே போவேன்
ஆரியகான சபா அனந்த நாராயண அய்யர்
அவர் அண்ணன் செல்லப்ப அய்யர்
ஆடிவரும் நாளையடி அடி என் பெயருண்டு
எனக்கு அதுவும் கற்கண்டு
மட்டில் அடங்கா சங்கீத
மாஸ்டர் எனவே புகழும்
கிட்டப்பா சுந்தரியை
கேட்க என் தேசிய ஞானம்
கே. எஸ். தேவுடு அய்யர்
ஆர்மோன்யம் போக அமைந்த பெயராக (ஆ)

மதுரை மிஸ் D. R. முத்துலெக்ஷிமி பாடிவரும்

கொலம்பியா No. V E 8

பல்லவி.

திருப்பரங்கிரி வளர் தேவாதி தேவா
தீரனே வா வா (திரு)

அநுபல்லவி.

விருப்புடன் நேராய்
வேண்டினேன் சீராய்
விகசித மயில்மிசை வேகமாய் வாராய் (திரு)

சரணம்.

காவடி வேலா கதியருள் சீலா
கஜமுகனுக்கிளைய காருண்ய லோலா (திரு)
ஷண்முக நாதா சங்கரன் போதா
சரப மயில்ப் பழனி சாமிக்கருள் நாதா (திரு)

மிஸ் P. C. மஸ்தம் பாடிவரும் பவூன் பாட்டு

காமிக் (No 33)

தளுக்கு சுந்தரம் தனியாய்ப் போரவளே
பெண்மேண (தளு)

உன்னத ஒய்யாரி அடி
எனக்கொரு முத்தந் தாடி
நீயுநானுங் கூடி விளையாடிடுவோம் வாடி கண்ணே (தளு)

கருணை செய்ய வாடி நீயொரு
சீமை கமல லேடி நம்
இருவருக்கும்சிறுவயதிலே சரியானஜோடிப்பெண்ணே (தளு)

ஏனேடி இந்த மோடி செய்யாதடி வாடி
இந்த கவியை தேடி அடி
காசி மகான் பாடிவரும் (தளுக்கு சுந்தரம்)

S. V. சுப்பையா பாகவதர் பாடிவரும்

பிளேட் No. 2742.

தாயிடத்திலன்பிலாத என்ற மெட்டு.

இராகம்-தேசிகதோடி—தாளம்-ரூபகம்.

பல்லவி.

தாரணியில் அன்பு கொண்ட
தங்கையைக் காணேன்—என்
தங்கையைக் காணேன்—நல்ல
தங்கையைக் காணேன்—இனி
இங்குயிர் பூணேன் (தா)

அநுபல்லவி.

நேரிலுனைத் தேடினேன் நெஞ்சமிக வாடினேன்
ஆறுமற்ற பாவியானேன் என் தங்கா
ஆறுமற்ற பாவியானேன் இன்று நான்
ஆறுமற்ற பாவியானேன் அபலை யோடினேன் (தா)

இராகம்-கரஹரப்பிரியா.

பிளேட் No. 2809. விருத்தம்.

சாதிகுலப்பிறப்பென்னும் சந்தேகந்தெளியாது தானாய் நிற்கும்
பேதகுணம் பற்றறுத்துப் பேரின்பவருட்சித்துப் பேணிக்காக்கும்
ஆதிபராபரமென்னுந் திருச்சிற்றம்பலத்தைக்கண்டானந்திக்க [யே
வேதமொழிவிளங்கி வருந்திருவாயால் விடைகொடுக்கவேண்டுமை

இராகம்-உசேனி—தாளம்-ரூபகம்.

தில்லையம்பல ஸ்தலமொன் றிருக்குதாம்—கண்டபேர்க்கு
ஜெனனமரணபிணியைக் கருக்குதாம்

உயருஞ்சிகரக் கும்பந்தெரியுதாம்—பார்த்தவர்க்கு
உள்ளங் குளிரக் கருணை புரியுதாம்

பண்ணவராயன் மாலுந்தேடுமாம்—தில்லைக்காட்டில்
பாம்பும் புலிக்கு நிர்த்தனமாடுமாம்

அரிய பிரமனெழுத்தைத் தள்ளுமாம்—ஆரையுமது
வானந்த முழுக்காட்டிக் கொள்ளுமாம்

போய்வருபவர் புண்ணியசாலியாம்—தருமராஜன்
புறத்தில் மழுது வந்து கேலியாம்

உருவில்லாத குருவொன் றிருக்குதாம்—மூலக்கனலை
ஊதியெழுப்பிக் காணப்பெருக்குதாம்

உருவமாகி வெளியே வருகுதாம்—நான்மறைக்கு
முணர்வில்லாத காட்சி தருகுதாம்

போய்வருக வுத்தாரந் தாருமே—பொன்னடித்தாள்
போற்றுவேன் கண் ணாலே பாருமே (தில்)

முதற்பாகம் முற்றிற்று.

உ

ஸ்ரீமுருகன் துணை.

ஒரிஜினல் புதிய பிளேட்

கிராமபோன் பாட்டுகள்.

(இரண்டாம் பாகம்)

இராகம்-கமாஸ்.

வாழையடி வாழையென வந்த திருக்கூட்ட
    மாபினில் யானொருவனன்றோ வகையறியேனிந்த
ஏழைபடும் பாடுனக்குத் திருவுளச் சம்மதமோ
    விதுதகுமோ விதுமுறையோ விதுதருமந்தானோ
மாழை மணிப் பொது நடனஞ்செய் வள்ளல் யானுனக்கு
    மகனலனோ நீ யெனக்கு வாய்த்த தந்தையலவோ
கோழையுல குயிர்த்துயா மினிப் பொருக்கமாட்டேன்
    கொடுத்தருள் நின் னருளொளியைக் கொடுத்தருளிப்
        [பொழுதே.

ஆர்மோனியம் A. S. இராஜப்பா பாடிவரும்
பிளேட் No. 2810.

இராகம்-காபி—தாளம்-ஆதி.

பல்லவி.

கந்தா காருண்யனே   கனசேவலனே   (க)

அநுபல்லவி.

செந்தூரார் புண்ணியனே கோடி காவலனே (க)

சரணம்.

ஆதியோட னாதியான ஐயனே முருகையனே
பொன்னே பூம்பதமே உன்னை போற்றினேனே
என்மே லென்கதமே பணிந்தேற்றினேனே (க)

தொகையறு.

காக்ஷி யோத கடாக்ஷி மாக்ஷிகொள்
கந்தனே சிவன் மைந்தனே
சாக்ஷி யேது மீனாக்ஷி யாள்தரு
சந்தனே பிர பந்தனே

(சரணத்தொடர்)

முக தன
தந்த தேவே சரணம் இன்னும் தாமதமா
பண் ய் தருணம் அசம் பாவிதமா (கந்)

இராகம்-செஞ்சுருட்டி-புன்னாகவராளி-தாளம்-ஆதி.

நாத சங்கீத பொன் மணி மண்டப
நயனத் திடையினில் நடனங்கண்டே
நாவை மடக்கியே மேல் வாசல்
நளினமது வருந்த அருள்வாயே
ஞான வேலா ஞான வேலா
நவமணி பதித்தொளிர் ஞான வேலா (நாத)

முத்தொடு பவளமும் பச்சையு மாய்
முச்சுட ரொளிமணி முழக்க மெனும்
சுத்த அற்புத வித நாதம்
தொனிக்கு தெனக்குள் சுதிலயத்துடனே
சோதியாதே சோதியாதே
சுதனென்னை இனிபரி சோதியாதே (நாத)

கமலமென் மலரிதழ் மணவாழும்
கௌரி குண்டலி துயில் கலைந்திடவே
சமரச மோன சுகாதீத
தாரக பிரணவச் சுழி முனையின்
சாம கீதா நாமகீதா
தவமகரிஷி மகிழ் சாம கீதா
பஞ்சுபோற் பட்ட துன்பம் போ
பாலனை வெறுப்பதுண் கண்மணி மடமா
கொஞ்சம் தயவு செய்யலாகா[illegible]சான்
குழந்தை நான் சொல்வதெல்லாங் கேளாதா
கோபமாமோ கோபமாமோ
குழந்தை என் மீதில் மனஸ்தாபமாமோ (நாத)

ஷியார் பாடிவரும்
பிளேட் No. 2837.

சுருளிமலைமீது மேவும் சீலா என்ற மெட்டு.

கீரிமலை க்ஷேத்திரத்தின் பெருமை—எப்
பாரிலுமறியும் தீர்த்தக் தருமை—ஸ்நானம்

கோரிட நகுலேஸ்வரன் கிரிமுகமாக நேரில்
காக்ஷி கொடுத்த மாக்ஷி (கிரி)

நீரிலுமொருபாக முப்புத் தண்ணீர்—ஸ்வாமி
நீதியால் மற்றொரு பக்கம் பன்னீர்—என
நினைத்து அருந்துவோர்க்கு—வினைப்பயன்களை தீர்க்கும்
மூர்த்தி சேவை நேர்த்தி (கிரி)

நகுலாம்பிகை மகிழும் திருவே—எந்த
நாளுமேயுனைத்தொழுதேன் ஏழைக்கிரங்கி யிவ்வேளை
அருளே பரம் பொருளே (கிரி)

தெய்வங்களில் நீயே சக்ரவர்த்தி—மூன்று
தமிழுக்குரிய அபி விர்த்தி—இந்த
தென்முக தனகார்மேகம் உள்ள மதிலே உறையும்
தேவே கவி கோவே (கிரி)

ஆர்மோன்யம்

T. M. காதர்பாக்ஷா சாயபு பாடிவரும்

பிளேட் No. 3741. இராகம்—செஞ்சுருட்டி.

(1) மாயாப் பிரபஞ்சமடி பாப்பா—இதில்
மயக்கம் நீ கொள்ளாதடி பாப்பா
நம் காயம் பொய்யாகுமடி பாப்பா
இதை கண்டு நீ தெளிந்திடடி பாப்பா (மா)

(2) பெண்டு பிள்ளைகளெல்லாம் பாப்பா—நம்மை
பிடுங்கித்தின்னும் பேயடியோ பாப்பா—நமக்
குண்டோ இதிலென்சுகம் பாப்பா—வெறும்
ஊற்றச் சடலமடி பாப்பா— (மா)

(3) பொய்யுல காக்ஷியடி பாப்பா—பொல்லா
பொம்மலாட்ட மடியோ பாப்பா
சிறுமெய்யது கொஞ்சமில்லை பாப்பா—மேக
மின்னற் போலே மறையுமடி பாப்பா (மா)

விசலூர் N. சுப்ரமண்ய பாகவதர் பாடிவரும் புதிய பிளேட் No. 3870.

கண்ணிகள்.

(1) கட்டாணிமுத்தே என் கண்மணியே
உன்னைவிட்டகலேன் மடமானே
தொட்டால் மணக்குது சொன்னால்
இனிக்குது தோகையுன் தேகப்பேர் தானே

(2) தித்திக்கும் முக்கனி தேனுடன் சர்க்கரை
சேர்ந்ததைப் போலொரு வாக்யம்
எத்திக்குமேயொரு சத்திக்கச் சம்மதி
இங்குரைத்தாலது பாக்யம்.

(3) ஆனந்த வஸந்த காலமிதுவடி
அங்கஜனோடு விளையாட
ஞானந்தரு மதுராபுரி பாஸ்கர
நாத வேத கீதம் பாட. (க)

ஷியார் பாடிவரும்

கோவலன் பாட்டு.

இராகம்—முகாரி.

திருக்கடை ஊரென்பது இதுதானோ
தேரோடும் வீதியென்பது இதுதானோ
மாதவி வீடென்பது இதுதானோ
மாதர் வசிக்கும் வீதி இதுதானோ

கள்ளபார்ட் சக்ரவர்த்தி

A. M. கார்மேக ஆசாரி பாடிவரும்

வாங்க வாங்கலடி லவண்டிகளா என்ற மெட்டு.

பிளேட் No. 3628.

நில்லு நில்லுங்கடி பெண்டுகளா—வா
சொல்லிய சல்லிப்பயலே கண்டிங்களா
எல்லே விட்டகலா மண்டுகளா வாத்தி
தொல்லே சகியாது காட்டில் நிண்டிங்களா—நீங்கள்

நல்ல குலமாச்சே அது
செல்லரித்து போச்சே இந்த
கல்வியும் வீணாச்சே இந்த
தொல்லுலகில் பேச்சே

செல்லு செல்லுங்க சிரிக்கிகளா—ராஜா
செல்வத்தை கெடுத்திட்ட காமசிரிக்கிகளா—செடி

காணிலலேய உங்கள்
மேனி குலேய ததி
கொர்வம் ஒழிய வீணு
கர்ப்பு மழிய
கண்டேண்டி கார்மேகமே மாஸ்டர் வாய்ஸ் கம்பெனி
பிளேட்டில் விட்டேண்டி நற்பதமே (நி)

சங்கீத வித்வான் கானவிசாரதா.

மைசூர் மிஸ்டர் P. கிருஷ்ணப்பா

S. V. சுப்பையா பாகவதர் பாடிவரும்

பிளேட் No. P 1526

இராகம்-நீலாம்புரி—ஆதி.

ஸ்ருங்கார லஹரி
ஸ்ருதஜன சுபகரி (ஸ்ரு)

அநுபல்லவி.

ஸங்கீதாம் போஜா காந்தா
மலமா துரி மதமதுகரி
மங்களாங்கி மதனரி மனோஹரி
ஸா ரிஸநிப ஸநிபம கமபா கமபஸநிப பாமா காம
பநி ஸரிஸநி ஸநிபம பநிபம பமகம ரிகம ரிகரி பா
மாபநி ஸஸநிப நிநிபம பபமக மமகஸ மகபம நிப
ஸநிபம கம பநிதநி பதப பமகஸ பமகஸ நிபமகஸ
ஸநிபமகஸ ரிஸநிபம காமபநி. (ஸ்ரு)

அங்கஜாரி ஹ்ருதயங்க மதாரஹஸித்தே
அகிலாகம ஸந்நுதே
ப்ருங்கத்ருபுர கருணாரஸபரிதே
துங்க ஜகனலலித்தே ஸாரஸேவிதே
பருங்கராஜ வதனம்புஜ பூஜிதே

ஸா ரிஸநிபஸநிபம கமபா கமபஸநிப கமபநி ஸரி
ஸநி ஸரிபம பநிபம பமகம ரிகரிகரி பாமாகாமபநி
ஸஸநிப நிநிபம பபமக மமகஸ மகபம நிப ஸநிப
மகம பநிதநிபதப பமகஸ நிபமகஸ ஸநிபமகஸ
ரிஸநிகம காமபநி (ஸ்ரு)

S. V. சுப்பையா பாகவதர் பாடிவரும்

பிளேட் No. 2972

இராகம்-தோடி—தாளம்-ஆதி.

பல்லவி.

சிங்காரி ஒய்யாரி (சிங்)

மகுடங்கள்.

ஜெகத்தை மயக்குமிந்த
முகத்தைப் படைத்திட்ட (சிங்)
சேவைதந் திட வந்த
பூவை யிங் கித பரிமள (சிங்)

சீனியுடன் முக்கனி தேனுங் கலந்தமொழி
யாளு மிவளேயினி யானுந்தரிசித்திடத்தக்க (சிங்)

சித்தரு முத்தரும் நித்த மதித்திடும்
உத்த மகத்துவ வித்துவரின (சிங்)

சரணம்.

பங்கேரு கண்ணை தேர்ந்து படைத்திட்ட ராணியாம்
பருவத் திருவுருவில் பாக்யக் கல்யாணியாம்
மங்காத சங்கீதத்தில் மகிமைக்கோர் வேணியாம்
மனதுக்குரிய மயிலாள்—இசையமிர்த
வனிதைக்கிசையுங் குயிலாள்—இவளேயின்று
வஞ்சிக்குந் தென் கூடற் பாஸ்கரன்
சொற்பொரு ளற்புத விற்பனியான (சிங்)

ஷியார் பாடிவரும்

இராகம்-அடாணு—தாளம்-ஆதி.

பிளேட் No. 2972 பல்லவி.

கட்டிக் கரும்பே தேனே
கனியே மோகினி மானே (கட்)

அநுபல்லவி.

அட்டி செய்வதேன் அருள் விழியாளே
ஆருயிர் தர்மந்தனே அறிந்த விழியாளே

மட்டிலாத ஒரு மத விழியாளே
மதுரக்குயில் கிளிபத்திடும்
மொழியாளே (கட்)

சரணம்.

பாரினுனை வணங்கிடும்
ததி சுகு மாரி
இளம்பாங்கு மிகு
வரத நேரில்
எனதருமை தெரியாமலே
இனிக்கருணை யுதிக்கும்
தமிழ் பாஸ்கர (கட்)

ஷையார் பாடிவரும்

இராகம்-சாமா—தாளம்-ஆதி.

பிளேட் No 2888

பல்லவி.

காதலின் பாக்யம் கதிதரும் யோக்யம்
காணுவாய் இன்பமே லாக்யம்
பெரியோர் வாக்யம் (கா)

அநுபல்லவி.

ஆதலினுலென்னை யாதரிப்பாய் கண்ணே (கா)

சரணம்.

பேதலிக்காதே யுன்னைப் பிரிந்திடேன் சத்யமிதே
பேசு மதனயோக பூஜிதஞ் செய்வோ மதை
ஈடிலாப் பாஸ்கரன் சொல்
தேவியே யென்னுவியே (கா)

ஷையார் பாடிவரும்

இராகம்-தங்யாசி—தாளம்-சாபு.

பிளேட் No. 2865. பல்லவி.

காமசுந்த ராங்கி உனது
காதலோங்கியே மனமுருகுது அறிகுவாயடி (கா)

மகுடங்கள்.

கட்டுப் பட்டேன் கணைமலர்
பட்டுக் கெட்டுத் தடுமாறினேன் (காம)
கடுந் துயரம் மிகுந்தேனடி
இளங்குயில்தருங் கொடுந்துயரமது (காம)
கட்டுப் வட் டிருஸ்தனமலதை
இட்டுக்கிடு நெறிதரவிது (காம)
கவிக்குலுயர் பாவினமே
படித்துதடி சிறப்படைய
நிலைத்திடுவோம் மலரணை யிதிலுரை (காம)

அநுபல்லவி.

தேமிகுந்து மேசிறந்து
திடஞ் சிறிது ரசங் கொடிது
அகங் குளிர உலகு புகழுவரு (காம)

சரணம்.

வண்டு மொய்த்த மலர்க்கூந்தலாளே
மாமதியை நிகரும் முகத்தாளே
ஒண்டுமா ஜெகத்து மகற்றுளே
உடல் பொருள் உயிர் சகலமும்
உனதிட மீதோ தருகிறேன் ஆணைய நீ (காம)

மதுரை புதுக்குயவர்பாளையம்
ஸ்ரீலஸ்ரீ மாரியப்ப சுவாமிகள் பாடிவரும்
வேதாந்தகிளிக் கண்ணி.
பிளேட் No. 2606.
இராகம்-தேசிகம்—தாளம்-ஆதி.
(முதற்பாகம்)

ஐந்துகர னுக்கிளைய ஆறுமுக வேலவனை
செந்திற் குகந்தவனைக் கிளியே
சேரமனம் சோருதடி (ஐ)
ஐந்து வயதினிலே அறியாப் பிராயத்திலே
பிஞ்சிலே கூடினேண்டி கிளியே
பிரியமனங் கூடவில்லை (ஐ)

வள்ளிக் கணவன் பேரை வழிப்போக்கர் சொன்னாலும்
உள்ளங் குழையுதடி கிளியே
ஊனு முருகுதடி (ஐ)

எட்டாப் பழம்வடியோ இறக்காத தேன்வடியோ
மட்டில்லா வானந்தமே கிளியே
மால் மருகன் தந்தசுகம் (ஐ)

போகந் தவிர என்னைப் புல்லிச் சுகித்திருந்து
ஏக வெளிதனிலே கிளியே
என்குறையைச் சொல்வேண்டி (ஐ)

போகமற்ற தானாலும் புகுந்து உள் பார்ப்பார்க்கு
ஏகாந்த வேளையிலே கிளியே
என் குறையைச் சொல்வேண்டி (ஐ)

ஷியார் பாடிவரும்

பிளேட் No. 2606. (ஷை 2-ம் பாகம்)

இராகம்-தேசிகம்—தாளம்-ஆதி.

மோகந்தவிர என்னை முந்தி பிடித்திழுத்து
ஏக வெளிதனிலே கிளியே
என்னைக் கலந்தாண்டி (ஐ)

கட்டுக் கொடிபடர்ந்த கருமுகிற் காட்டுக்குள்ளே
விட்டுப் பிரிந்தாரடி கிளியே
வேலவற்கு உட்படுவன் (ஐ)

பேசியிருக்கிறார்கள் பித்தவுடல் நோய்களுக்கு
ஆசைக்கொரு மருந்தை கிளியே
அங்கையில் வைத்தாரடி (ஐ)

நீலமயில்வாகனனால் என் நெஞ்சங்கரைந்ததென்று
பாலுங் கசப்பாச்சுதே கிளியே
பசலையும் பூத்ததடி (ஐ)

மாலைவடி வேலவர்க்கு வரிசையாய் நானிருந்தும்
ஓலையும் கிறுக்காச்சுதே கிளியே
உள்ளமும் உண்டாச்சுதே (ஐ)

உண்டாற்சிறுக்கவைக்கும் ஊரிலுள்ள கைச்சரக்கு
கண்டாற் சிறுக்கவைக்கும் கிளியே
கட்டழகன் பேரின்பம் (ஐ)

குன்றைக்குடி முருகன்பேரில் பாடிய கீர்த்தனம்.

இராகம்-கமாஸ்—தாளம்-ஆதி.

பிளேட் No. 2238. பல்லவி.

குன்றைக்குடி குமரனே மால் முருகனே (கு)

அநுபல்லவி.

நின்றாய் தவம்புரிவாய் நன்றாயெழிய முன்பு (கு)

சரணம்.

பொல்லாத மாதருறவால் உனை மறந்தேன்
எல்லாம் பொறுத்தருள் நினையல்லாது தெய்வமுண்டோ (கு)

கற்றோருறவை மறந்தேன் அறிவிழந்தேன்
நற்றாய் உனைப்போலுண்டோ சற்றாகிலும் க்ருபைசெய் (கு)

M. M. மாணிக்க பாகவதர் பாடிவரும்

புதிய பிளேட் பாட்டு.

(நொண்டிச்சிந்து)

தேடிவந்தேன் வேடுவப்பெண்ணே—என் மானைத்
தேடி மிக்கத் தத்தளித்து வாடினேன் கண்ணே
மோடி நீயுஞ் செய்யப்படுமோ—பேசிடில்
முந்துகனி வாயின் முத்தஞ் சிந்தி விடுமோ
அடையாளஞ் சொல்லுகிறேன் கேள்—எந்தன் மான்
அந்த மான் சிவமுனிவர் தந்த கலைமான்
இடையுஞ் சிறுத்த மடமான்—விழிமான்
இந்த நற் றினைப்புனத்தே வந்த குறமான்
விரிந்த கொம் பிரண்டுள்ள மான்—கொம்பிரண்டு
மேவினுந் தலை நிமிர்ந்து பாய்ந்திடத மான்
சிறந்த வடிவுடைய மான்—நலமான்
செந்திநகர்க் கந்தவேள் தனக்குவந்த மான்
மேனியிற் புள்ளியில்லாத மான்—ஜாகை
மீதினிற் காயாத புல்லை மேயாத பெண் மான்
அகிலத்தவர் புகலத்த குமான்—வனமான்
அமிர்தக்கிரி மதுரக்குயில் மொழி கற்றிடுமான்

சுகிர்த கல விளையப்பெற்றிடுமோன்—குலமான்
சொலு மற்புதக் கவிகற்றவரு வந்திடுஞ்சற் குணமான்
கண்டதுண்டோ வள்ளிமானே—உன் பார்வையில்
கண்டாயோ இல்லையோ காதல் கொண்டதால் நானே (தே)

K. B. சுந்தராம்பாள் பாடிவரும்

இராகம்-காபி—தாளம்-ஏகம்.

பல்லவி.

தாயிடத்திலன் பிலாத ஜென்மமும் வீணே பெற்ற (தா)
சொந்த (தா)
வளர்த்த (தா)

அநுபல்லவி.

தாய்நாட்டி லன்பிலார்க்கு தர்மமேது கர்மமேது
பேயாய்த் திரிபவர்க்கு பெயரேது (பெ தா)
மானிலத்து மக்களெல்லாம் மகிழ்ந்திடும் நற்சோதரரே
தானே யறிந்து தாயை போற்றுவீரே (பெ தா)
ஒற்றுமையிலாத நீங்கள் உலகத்தை யாள்வீரோ
கற்று மறியாத மூடக் கசடர்களே (பெ தா)
தலைவர் வசனம் கேட்டு சாந்தமோடு அவர்க்குள்பட்டு
கலவரங்கள் செய்வதென்னை கைவிட்டு (பெ தா)
சாதி மதத்தாலே சண்டை தானேயிடும் பேதையரே
சாதியேது மதங்களேது சாற்றுவீரே (பெ தா)
சாயிம்சை செய்யும் பூண்டு சர்க்காரை நீர்கைக்கொண்டு
காந்தியடிக ளுபதேசம் மெய் கண்டு (பெ தா)

இரண்டாம் பாகம் முற்றிற்று.

உ

ஸ்ரீ முருகன் துணை

ஒரிஜினல் புதிய பிளேட்

கிராமபோன் பாட்டுகள்.

(மூன்றும் பாகம்)

K. B. சுந்தராம்பாள் பாடிவரும்

பல்லவி.

செந்தூர் வேலாண்டி—ஆண்டி திருச் (செ)
சேவை ஷேமந்தாண்டி—ஆண்டி திருச (செ)

அநுபல்லவி.

பந்த பாசங் கடந்தால்
பாவலருண்டு வந்தால்
பரம குருபரன் அறுமுக சரவணன்
திருமலை முருகனு முறையுட னருள்தருஞ் (செ)

சரணங்கள்.

பரிமளத்துயர் அரிய சொக்கர்மகிழ்
பிரிய முற்ற தொரு உரிய நற்புதல்வன் (செ)
படைத்த பிரமனை யடைத்துச் சிறைதனில்
உரைத்த பிரணவ முகத்தி னகமகிழ் (செ)

சென்னை-600 00

சரணம்.

கந்தன் கடம்பன் குகன்
கானவள் ளிதன் லோலன்
கற்பனே தற்பர சாமி சொல்லற்புத
பொற்பத முற்றிய சாமி தமிழ்ப்பெறுஞ் (செ)

S. V. சுப்பையா பாகவதர் பாடிவரும்

இராகம்-காபி—தாளம்-சாபு.

பிளேட் No. 1721.

மாங்காய்ப் பாலுண்டு மலேமேலிருப்போர்க்கு
தேங்காய்ப்பா லேதுக்கடி குதம்பாய்
தேங்காய்ப்பா லேதுக்கடி

சத்தியமான தவத்திலிருப்போர்க்கு
உத்தியோக மேதுக்கடி குதம்பாய்
உத்தியோக மேதுக்கடி

தாவாரமில்லே தனக்கொரு வீடில்லே
தேவார மேதுக்கடி குதம்பாய்
தேவார மேதுக்கடி

வெட்டவெளி தன்னே மெய்யென்றிருப்போர்க்கு
பட்டய மேதுக்கடி குதம்பாய்
பட்டய மேதுக்கடி

ஷியார் பாடிவரும் புதிய பிளேட்

இராகம்-காபி—தாளம்-ஆதி.

கற்பிற் சிறந்த எந்தன் கனியே அருங்கனியே
பெருந் துணையே அருந்துணையே (க)

அநுபல்லவி.

அற்புத மகிமையை அறிந்த உன் குணமே
ஐயோ எனைவருத்தல் வருந்துணை வீணுமே
நற்பயன் தருமாயர் குலர்த்தமை குணமே
நம்பிவிடுத்தேனெந்தன் தேவி நானே பாவி
உயிர் மேவி உயிர் மேவி (க)

சரணம்.

செல்வச் சிறப்பிழந்து சிறமப்பட்டோமே
தேவடியால் கடனுல் சிறமமுற்றோமே
வல்வினை பயன் வந்து வழி தடுத்தானே
வந்த நமக்கு இந்த காலம் அலங்கோலம்
தவசீலம் அலங்கோலம் (க)

ஷியார் பாடிவரும்

வள்ளி திருமணம்.

இராகம்—பைரவி-விருத்தம்.

காயாத கானகத்தே நின்றுலாவும் நற்காரிகையே
மேயாத மரன் புள்ளி மேவாத மான் நல்விழி மான்
சாயாதகொம்புஇரண்டிருந்தாலும் எனைத்தலை நிமிர்ந்து
பாயாத மான் வந்ததுண்டோ உந்தன் பார்வையிலே

திருப்புகழ்.

பிளேட் No. 3205.

பக்கரை விசித்ரமணி பொற்கலனை யிட்டநடை
பட்சியெனு முக்ரவுர—கமுநீப
பக்குவமலர்த்தொடையும் அக்குவடு பட்டொழிய
பட்டுருவ விட்டருள் கை—வடிவேலும்
திக்கது மதிக்கவருங் குக்குடமும் ரக்ஷை தரு
சிற்றடியு முற்றிய பன்—னிருதோளும்
செய்ப்பதியும் வைத்துயர் திருப்புகழ் விருப்பமொடு
செப்பென வெனக்கருள் கை—மறவேனே.

மதுரைராயல் பபூன் N. S. ஷண்முகம்பாடிவரும்

பிளேட் No. 577.

இராகம்-செஞ்சுருட்டி—தாளம்-ஏகம்.

1. வாங்க வாங்கடி லவண்டிகளா
அந்த வாத்தியார் சட்டாம்பிள்ளையைக் கண்டிங்களா
வாங்க வாங்கடி லவண்டிகளா
அந்த வாத்தியார் சட்டாம்பிள்ளையைக் கண்டிங்களா

2. போங்க போங்களடி பெண்டுகளா அய்யோ
ஒரு புருஷனுக்கு ஆசைப்பட்டு நின்றிங்களா
போங்க போங்களடி பெண்டுகளா
ஒரு புருஷனுக்கு ஆசைப்பட்டு நின்றிங்களா

3. அடி புத்தி கெட்டுத் தானே நீங்க புறப்படுவ தேனோ
நித்தியமும் தானே நிலைகுலைந்து மானே
நீலம்பிதக் கயிலே சிதம்பர
அடி சிதம்பரம் காலையிலே
சிங்காரம் காணுதடி உங்களுக்கு
ஜீவனம் கிருக்குதடி
சிங்காரங் காணுதடி ஜீவனங் கிருக்குதடி

4. செல்லு செல்லு திருச்சி நகர் செல்லு
செல்லு செல்லு திருச்சி நகர் செல்லு
நீ திருவாரூரு செல்லு திருவாரூரு செல்லு
திருமதுரை செல்லு திருமதுரை செல்லு
சிறிக்க வேண்டாம் பல்லு
மை ஜீனி பட்டா ஜில்லு
ஜில்லு ஜில்லு ஜில்லு (வா)

பிளேட் No. 578.

தெம்மாங்கு.

அடி மானுருட்டும் கண்ணழகி அடி அடி அடி அடியே
என் மனக்கட்டு பெண்ணழகி அடி அடி அடி அடி (அ)
அடி தேனருந்தும் திணையழகி அடி தேனருந்தும் திணையழகி
திணையழகி
உங்கள் சேதியெல்லாம் தெரியுமடி தெரியுமடி தெரியுமடி (அ)

பாட்டு.

அடி சிமிட்டுக் குட்டிகளா நீங்கள் சீமையை விட்டிங்களா
அடி அமட்டுக் குட்டிகளா ஊரில் அலையப் போரிங்களா
அடி சிமிட்டுக் குட்டிகளா உங்கள் சீமையை விட்டிங்களா
அடி அமட்டுக் காரிகளா நீங்கள் அலையப் போரிங்களா

தெம்மாங்கு.

கையோடு கை சேர்த்து அடடட டடடட என் சாமி
இந்த காளைமாடு ரெண்டும் நான் சேர்த்து
டுன் டுன் டுன் டுன் டுன் டுன் டுன் டுன் டுண்டு
அடி கையோடு கைகோர்த்து காளை மாடு ரெண்டும் சேர்த்து
அடி அடி அடி அடி அடி

பாட்டு.

பைய்யா பைய்யா நடந்துவாடி
பசுப்புக்கார தளிக்கிகளா
வடமதுரையடி பெண்ணே பயப்படாதடி
இங்கு வலவிருக்குதடி பின்னே வாங்கடி ஓடி
வலவிருக்குதடி பின்னே வாங்கடி ஓடி (அ)

மதுரை, N. S. ஷண்முகம் பாடிய புதிய பிளேட்

பல்லவி.

சைனா ஜப்பான் ரெங்கோன் பர்மா
சல்லாசில்க்கு காரியே (சை)

அநுபல்லவி.

மைனு பிடிக்காதடி மாருட்டம் பேசாதடி
மதிக்கும் ஈகோ செண்டு சோப்பு
மாறிப்போச்சு கிராப்பு சீப்பு (சை)

சரணம்.

நாகரீகம் பெருக்கப் பெருக்க—தற்கால உலகத்தில்
நடைகளெல்லாம் மாறிப்போச்சு
தேகம் வெளுத்துப்போச்சு
சிங்காரப் பின்னலாச்சு—அடி
செந்தூரஞ் சாந்து சந்தியில் போச்சு
இந்தியர் காலம் இப்படியாச்சு (சை)

அந்த—நாட்டுக்கோட்டை பியூட்டியே
எதேஷ்டமாய் வளர்ந்தது
வீட்டுக்கொரு காருமுண்டு
விளையாட்டுச் சரஸமுண்டு
வெட்கக்கேடு வெளியிற் சொன்னுல்
அக்கம் பக்கம் சிறிக்கும் பின்னுல் (சை)

ஆர்மோன்யம் T. M. காதர்பாக்ஷா சாயபு அவர்கள் பாடிவரும்

பிளேட் No. 2717.

இராகம்-செஞ்சுருட்டி—தாளம்-ஆதி.

சுருளிமலை மீதில் மேவுஞ் சீலா வுனை
தோத்தரித்தேன் சுப்ரமண்ய வேலா பசு

தோகைமயி லேரி நிதம் வாருடனே காருமென்னை
துய்யா முரு கையா (சுரு)

கண்ணிய முடனே பலநாளும் மச்சக்
காவடி யுன் சன்னதியிற் சூழும் திருக்
காக்ஷிதனை என்ன சொல்வேன் மாக்ஷிமை மிகுந்திலங்கும்
கந்தா சிவன் மைந்தா (சுரு)

தீராப் பிணியகற்றும் தேவே உந்தன்
சித்துதனை என்ன் சொல்வேன் கோவே முன்பு
தென்பொதிகை முனிவனுக்கு
அன்புட னுப தேசித்த
திருவே வேத குருவே (சுரு)

ஆர்மோன்ய சக்ரவர்த்தி கவாய்

K. T. நடராஜ பிள்ளை பாடிவரும்

(அதிரூப அமராவதி நாடகம்.)

அதிரூபனுக்கும் அமராவதிக்கும் தர்க்கம்.

இராகம்-செஞ்சுருட்டி—தாளம்-ஏகம்.

பிளேட் No. 2364. பாட்டு.

கண்ணுட்டி யென் கட்டழகி
காதல் தீரடி என்
கருத்தை மாற்றடி நல்ல

பொருத்தம் பாரடி—இந்தக்
காலம் நிலாக்காலம்
இந்தக் காட்டுக் கனுகூலம் (கண்ணாட்டி)
ஐயோ ஐயோ (கண்ணாட்டி)

அடா நீ நினைக்கிற நினைவுக்கிது
நேரமல்லடா ராஜா நேரமல்லடா
தங்கம் நேரமல்லடா
மச்சா நேரமல்லடா
இந்த நிலாக்காலம் போகட்டும்
சமாதான மாகட்டும் (அடா நீ நினை)

மலர்ப்பஞ்சணையில் கூடி நாமும்
சமயம் பாரடி குட்டி
நாளும் கூறடி (நீ நினை)

அடி நாள் கிழமை நட்சத்திரம்
பார்க்கவேண்டாமா குறி
கேட்க வேண்டாமா—பணஞ்
சேர்க்க வேண்டாமா (நீ நினை)

கள்ளபார்ட் சக்ரவர்த்தி

R. நடராஜ ஆசாரியார் பாடிவரும்

(ஓரடித் தெம்மாங்கு.)

தாரா புரக்குயிலே தங்கிவா கொஞ்சம்
தாளங்கள் மேளங்கள் கொஞ்சம் போட்டுவா

தஞ்சை நகர்த் தளுக்கைப் பார்த்துவா அந்த
கொடி மாத்து மூலே கொஞ்சம் கேட்டுவா அந்த
கோளநட ராஜனுட்டம் பார்த்துவா அடி (தாரா)

அடி திருவாளூரு தோடியை
திரும்பிப்பாரு நீரடியை
மன்னார்குடி போம் வழியை
மரிக்கொழுந்தாம் நானும் நீயும்
மானுமதுரை வடமதுரை
திருமால் நாயக்கன் ஓரத்திலே
தெற்கே போற மண்டபத்திலே
தேரோடும் வீதியிலே
தேடியுனைக் கண்டேன்
பார்த்தேனடி அடி
தெவிட்டாத வார்த்தை
கொஞ்சம் சொல்லடி
தாரா தாரா தாரா புரக்குயிலே தங்கிவா

ஷியார் பாடியது.

(இராகம்—புன்னுகவாளி.)

திருவொற்றியூரு தேரு வருகுது
திரும்பிப் பாரடி கண்ணுட்டி
திரும்பிப்பாரடி தங்கமே

திரும்பிப்பாரடி ராஜாத்தி
திரும்பிப்பாரடி
திரும்பி சற்றே முகத்தைக் காட்டி
விரும்பிக் கோரடி தங்கமே
விரும்பிக் கோரடி
தங்கத்தாலே ரோட்டுப்போட்டு
தண்ணிக்குப் போரவளே தங்கமே
தண்ணிக்குப் போரவளே கண்ணாட்டி
தண்ணிக்குப் போரவளே அந்த
தங்கக் குடத்தை யிறக்கி வைத்து
தயவு செய்யடி கண்ணாட்டி
தயவு செய்யடி

வாலே வயதுக்காரி என்ற மெட்டு.

ஜோக்கு சொகுசுகாரி தங்கம் தில்லாலே நல்ல
ஜோலார் பேட்டை சேலைக்காரி தங்கம் தில்லாலே
தளுக்கு குலுக்குகாரி தங்கம் தில்லாலே அடி
தாழம்பூ கொண்டைக்காரி தங்கம் தில்லாலே
நடையா நடையழகி தங்கம் தில்லாலே வெகு
நாகரீக மானவளே தங்கம் தில்லாலே
எரணுவரம் சந்தையடி தங்கம் தில்லாலே எந்தன்
எந்திழையே போய் வரலாம் தங்கம் தில்லாலே

ஆர்கண்டி ரவிக்கைகாரி
அண்டிவந்தேன் ஆசையாலே
தீரன் தியாக ராஜன்கவி
தித்திக்கும் படித்து வாடி

தங்கம் தில்லாலே உன்னே
தங்கம் தில்லாலே
தங்கம் தில்லாலே அது
தங்கம் தில்லாலே (ஜோ)

S. V. சுப்பையா பாகவதர், K. B. சுந்தராம்பாள் இவர்கள் பாடிவரும்

புதிய பிளேட் No. 1750.

கோவிலன் கண்ணகியை யாதவப்பெண்ணிடம் ஒப்புவித்தல்

நொண்டி சிந்து.

இராகம்-செஞ்சுருட்டி—தாளம்-ஆதி.

மாதவர் குலத்துதித்த—அம்மம்மா (மாத) நல்ல
மாட்டிடையர் ஆச்சி செய்தி கேட்டிடச் சொல்வேன்
ஆதவன் மரபினர்கள்—கூடி
அரசுபுரியு முயர் நகரந்தன்னில்
காவிரிப்பூம் பட்டிணமாம்—அதில்
கனத்த வணிகர் தங்கள் குலத்துதித்த
மேவிய மாச்சொட்டான் செட்டியார்—பெற்று
மெய் வளர்த்த மைந்தனென்பேர் கோவிலனென்பார்
மாதிவள் கண்ணகி யென்பார்—சிறுவயதில்
மாங்கனியைக் கைக்கொடுத்து மாலையுமிட்டேன்

மாதகியெனும் பெயர்கொண்ட—தாசியை
வைப்பு வைத்துக் கொண்டதினல் சொத்துமிழந்தேன்
மேலு மவனுக்கு நான் கடன்—ஆகி
விட்டதினுலிவள் சிலம்பு விற்கவும் வந்தேன்
தானேரிடத்தி லிருந்தே—மனம்
தத்தளித்து மெத்த மெத்த துக்கப்படவே
இதுதான் சேதியம்மா—இரு
நூபுரத்தை யன்றிதனம் மிச்சமில்லையம்மா (மா)

கபிலவாய் ராமநாத சாஸ்திரி அவர்கள் பாடிவரும்

புதிய பிளேட் No. 2844

இராகம்-அசாவேரி—தாளம்-ஆதி.

பல்லவி.

ஏமி கெதி நாகு ரங்க ரங்கா
ரங்கா ரங்கா ரங்கஸ்ரீ ரங்கா (ஏ)

அநுபல்லவி.

கருணா பரணு காவா தேவா
ரங்கா ரங்கா ரங்கஸ்ரீ ரங்கா (ஏ)

சரணம்.

தல்லிவி தன்றிவி
தெய்வமு சூடகானே

தயநிதே தாரி லேக
நீ தாரிணி சேரன்
தா மஸ மூலேக ஸ்ரீமனோ நாதா
எமி கெதி நாகு ரங்க ரங்கா (ஏ)

S. V. சுப்பையா பாகவதர் அவர்கள் பாடிவரும்

பிளேட் No. 2510 பல்லவி.

இராகம்-சங்கராபரணம்— தாளம்-ஆதி.

நிச்சயமாய் தீர்க்கக் கடனுக்கு வழி தோன்றவில்லை
நீதானொரு மார்க்கம் சொல்லடி அடியென் கண்மணே (நி)

அநுபல்லவி.

கச்சை கட்டி ஆடும் தாசி
இச்சை கொண்டேன் மகா தோசி
லச்சை யுற்றேன் ஊரா ரேசி
மிச்சம் நிந்திப் பாரா லோசி (நி)

சரணம்.

பெண்டு பிள்ளையை முன்கால
கண்டையருக் கரிச்சந்திரன்
பிரியமாய் விற்றதெதற்கு ஆதன்
பின்பவன்பறையனுக் கடிமையாகியிங்குவந்த
பிரேதங்களை சுட்டதெதற்கு பின்பு
கொண்ட கடனுக்கு சத்தியம்

குறைவு படாத தற்கும்
அண்டிநானல்லாமல் வேறே
அவனுக் கென்ன எனக்கும் (கிச்)

கோவலன் மாதகியிடம் விடை கேட்குதல்.

இராகம்-முகாரி—தாளம்-ஆதி.

அன்னமே நான் தாலிகட்டி
அன்று வந்த நாள் முதலாய்
இன்னமும் வீட்டுக்கு போகவில்லையே
பத்தினி—கண்ணகையும் மாண்டாளென்று
காகிதமும் வந்ததின்று
கண் கலங்கி நோகலானேன்
பெண்ணங்கே போய் வருவேன்
இந்த வேளை உத்தரவு தந்தனுப்பவேணுமடி
என்னையு மடிப்பவர்கள் இவ்வுலகிலுண்டோ கண்ணே
எந்தன் ஜாதியார்கள் கூடி வந்திருப்பார் கோடாகோடி
சுந்தரி நான் போகாவிட்டால்
பந்தி போஜனம் விலக்கி
எந்தனையே ஏசுவார்கள் மேலும்
அவளுக்கு கொள்ளி வைக்க மைந்தன்தா னங்கேது
வேணும் வேணும் உத்தரவு தந்தனுப்ப வேணுமடி (அ)

விருத்தம்.

மாலையும் கழுத்தைவிட்டு வாவில்லை யாதுசெய்வேன்
மாலையை யிந்தமாது வாங்காமற் போகாள் பாவி
மாலைநான் சூடும் வேளை வாலாமோ விந்தத்தொல்லை
மாலையாய் தரித்தயீசா மனத்துயர் தீர்ப்பாயின்றே

கோவலன்

கழுத்தில் விழுந்த மாலை
கழற்ற முடியவில்லை
காரிகை யிது யார் சூதோ
கத்தியும் ரம்பமும் வாழ்முனை மழுங்க
காரண மின்னதென் றறியேனே
கல்யாண காலத்திலிந்த வில்லங்கமேது
அல்லலாக வல்லவோ அமைந்த திப்போது
கைலவசா உன்னருள் சூதோ
இதை கத்தரிப்பதெப்படியோ இத்தருணத்தில் (க)

இராகம்-முகாரி—தாளம்-ஆதி.

கோ—பத்தினி கண்ணகியே பழுதுபடா ரத்தினமே
பத்தினி யானுலுன் பத்தாவைப் போலொரு
பதுமை யுண் டாக்க வேணும்
கோ—பதுமை நான் கொண்டு வந்தேன்
பாவி விடை கொடடி
பத்தினி கண்ணகி மறைத்தாள் முகத்தை நான்
பார்த்திட வேணுமடி

மூன்றும் பாகம் முற்றிற்று.

உ

ஸ்ரீமுருகன் துணை.

ஒரிஜினல் புதிய பிளேட்

கிராமபோன் பாட்டுகள்.

(நான்கு-ஐந்து பாகம்)

S.V. சுப்பையாபாகவதர் **S.G.** கிட்டப்பாபாடிவரும்

இராகம்-காபி—தாளம்-ஆதி.

பிளேட் No. 2717.

நல்வாக்கு நீ கொடடி

(1) நல்வாக்கு நல்வாக்கு
நான் சிலம்பு
செல்வாக்குட
பத்தினிப்பெண்ணே
செல்வாக்குட
தேவடியாள் கடனுல்

(2) தேங்காயுடைந்து
திருவிளக்கு
மாங்கா ...ழுகிவிடும்
...ிகைப்பூ

(3) செம்பு ஜலம்
சேர்ந்த

என் பத்தினிக் கண்ணே
நல்வாக்கு நீ கொடடி

விற்றுவாரேன்—அடி
னிருந்தேன்—என்
நான்
னிருந்தேன்-இப்போ
நொந்தேன் கண்ணே (ந)

விடும் இந்த
நின்று விடும்
நல்ல
வாடிவிடும்-கண்ணே (ந)

குறையும்-இந்த
சந்தனமுலரும்

வம்பாய் பெட்டி யுடையும்-அடி
வஞ்சியே நீ தெரிந்துகொள்வாய் (ந)

(4) வைத்த அடையாளங்கள்-கண்ணே
மாறுமல் தானிருந்தால்
செத்து மடியாமலே அடி யென்
பத்தினிக் கண்ணே நான்
செத்து மடியாமலே கண்ணே
திரும்பி வருவேனடி அடி (ந)

(5) வைத்த அடையாளங்கள் அடியென்
பத்தினிக் கண்ணே ஹோ
வைத்த அடையாளங்கள் கண்ணே
மாறிவிட்டால் மாமயிலே நான்
செத்து மடிந்தேனென்று நீ
தெரிந்துகொள்வாய் மாமயிலே கண்ணே (ந)

மிஸ் K. B. சுந்தராம்பாள் பாடிவரும்

கழுகாசலத்தில் சுப்பிரமணியருக்கும், நாரதருக்கும் தர்க்கம்.

இராகம்-அடாணு—தாளம்-ரூபகம்

சுப்— மார்க்கத்திற் கண்ட கனிதனக்குற்ற
சிலாக்கிய மென்ன முனியே
நா—அதை நோக்கும் பொழுதே புலன்கள்
ருசிதரும் தித்திக்கும் தேன் கனியே

சுப்— பக்ஷிகள் கண்டாலன்னேரமதைக் கோரி
பக்ஷித்திடாதோ சொல்வீர்

நா— பக்ஷிகள் கண்டால் பறந்தோடும் ஆகையால்
பக்ஷமுடன் செல்லுவீர்

சுப்— எட்டாத கொம்பிலிருக்கு மக்கனியை
எப்படிக் கொய்திடலாம்

நா— எட்டும் படிக்கிரு கொம்புண்டதைப்பற்றி
ஏறிப் பறித் திடலாம்

சுப்— மிக்க மேன்மையுள்ள அக் கனிக்கெவ்விதம்
மேவுங் குறிக ளுண்டு

நா— குளிர்ந்தமுமுண்டு கொங்கை யிரண்டுண்டு
கோதில்லாக் கண்களுண்டு

சுப்— பெண்களுக்குள்ள குறிகளிருப்பதால்
பேசுமோ வாய் திறந்து

நா— ராகப் பண்களுக்கெல்லாம் சுவை தருமே அந்தப்
பைங்கிளி வாய் திறந்தால்

மதுரை T. A. நாகசாமி பாகவதர் பாடிவரும்

புதிய பிளேட் பாட்டு.

இராகம்-பியாக்-நோட்— தாளம்-ரூபகம்.

அரனர் திருமகனே
அரிமால் மருமகனே
அமரர் புகழ் சுகனே
அகமீதருள் குகனே ஆதி (அர)—

துள்ளல்

அகலப் பல வினைகளுமுயர்
சகலக் கலைகளு மணுகிட
அதியற்புத கற்பித தற்பரனே வா வா
அவுணர்ச்சிரமுற்றறு கொற்றவனே வா வா
அமரர்ப் படைகட் கருணைற்றுணையே வா வா. (அர)

அங்கிங் கெங்கும் பரவிட
தங்குஞ் சொந்தந் தருமென
அந்த மிகுந்திடு செந்திலமர்ந்தோனே வா
பந்தமகன்றவர் புந்தி நிறைந்தோனே வா
எந்தனகங்களி கொண்டிட இன்றே வா வா. (அர)

மதுரை ராயல் பபூன் N.S. ஷண்முகம் பாடிவரும்

கொஞ்சுங் கிளி மொழி வஞ்சியே நாமினி என்ற மெட்டு.

கண்ணிகள்.

காலக் கொடுமையால் நாளுக்கு நாளாக
கலி பெருத்தது தேசம்
தோளுக்கு மேலாக யிருந்த மகிக்கை
தொங்கி விழுந்தது நாசம் (கா)

தொகையறு.

மஞ்சள் பூசும் முகத்தை மறைத்தது சோப்பு கத்தை
வஞ்சியர் வித்தை வர வர கெட்டுப்போச்சுது கத்தை

பாட்டு.

கூடிய பெண்களை குடி கெடுத்தது
கோணக்கிராப்புகள் பாதி
காப்பி டீ கொக்கோ உண்டாகவுமாச்சுது
கால் நகர்தனில் ஜோதி (கால)

கம்பு சோளம் கேள்வரகுக் குள்ள பலன்
காட்டுமே யித்தனை ரீதி
வந்தே மாதா சுதந்தா வீதியில்
வந்தார் மஹாத்மா காந்தி. (கால)

A. V. நாகசுந்தரராஜா பாடிவரும் புதிய பிளேட்

வள்ளி நாயகியை கண்டு சுப்பிரமணியர் பாடுவது.

இராகம்-பைரவி—தாளம்-ஆதி.

No. G. E. 6. பல்லவி.

தேடி வந்தேனே வள்ளி மானே—இனி
மோடி செய்யாதே செழுந்தேனே—தானே (தே)

மகுடங்கள்.

தீனமான குயிலொடு பாண்மிசை
கான வாழ்வி லுறுதல் சரியல்லவே (தே)

தித்தித்திடும் ஆலோலத் தொனியதில்
நத்திக் கொடு மாலாகிக் கருதினதால் (தே)

சித்தஜனின் கொடு பித்த மலர் பட
இத்ததி வெட்கிட முத்தமளித்திட (தே)

சரணம்.

கோடி நமஸ் காரமே
கோரி னேனின் நேரமே
கோமளாங்கி மதுரித பாஸ்கர
சாமி கீத சமரச துணைபெற (தே)

அரிச்சந்திர நாடக மயான காண்டம்

மிஸ் S. R. கமலம் பாடிவரும்

பிளேட் No. 1999.

இராகம்-காம்போதி—தாளம்-ஆதி.

கண்ணிகள்.

வேண்டித் தவம் புரிந்தேன் வெகு விரதமிருந்தேன்
விரும்பியுனக் காகவே மகனே மகனே மகனே
ஆண்டியருளால் கருவாகி நீ யுதித்த
அடிவயிற்றிடம் தந்தேன்மகனே மகனே மகனே
காலகால வுணவைக் கடிந்துவொளி மழுங்கி
கறுக்கமுலைக்காம்புகள் மகனேமகனே மகனே
நூலம் வதங்கி பால் தோன்றிடக்கண்டுமே
தோஷி மனமகிழ்ந்தேன்மகனே மகனே மகனே

பிளேட் No. 1705

இராகம்-செஞ்சுருட்டி—தாளம்-ஆதி.

கண்ணிகள்.

யார் போய் சொல்லுவார்
இந்த வேளை நாதனுக்கோடி (யா)

பாவிச்சந்திரமதி பழிகாரி பெற்ற பாலன்
பாம்பு கடித்திறந்து பரமபதம் சேர்ந்தானென்று (யா)

பார்ப்பானுக் கடிமையாகி பரதேசிபோலே நாங்கள்
பதைத்து பதைத்துவாடி பலதொண்டுசெய்தோமென்று (யா)

அய்யனின் கட்டளைப்போல் அடவி சென்றுமே பாலன்
அரவங் கடித்திறந்துபோய்தான் உயிர்சாய்ந்தானென்று (யா)

பேய்கள் நரி புலிகள் பெருத்த வனந்தனிலே
பாவி சந்திரமதி பிள்ளையை யிழந்தாளென்று (யா)

பிளேட் No. 2204

இராகம்-எதுகுலகாம்போதி—தாளம்-ரூபகம்

ஐயோ மகனே நீ யலறித்துடித்திட ளாவங் தீண்டலாச்சே
அருள் போச்சே இருளாச்சே
அப்பவே காண்ப தெப்பவே
காண்ப தெப்பவே எப்பவே எப்பவே (ஐயோ)

கப்பிய காட்டினில் அப்பா தேவதாசா
காலன் தீண்ட விதியோ முனி

சதியோ காலகெதியோ
கண்ணனே சொலு வண்ணனே
சொலு வண்ணனே
வண்ணனே வண்ணனே (ஐயோ)

இராகம்-செஞ்சுருட்டி—தாளம்-ஆதி.

பல்லவி.

அப்பா மாண்டாயோ ஓ ஓ பாலனே
எப்போ காண்பேண்டா என் சிலனே (அப்)

அநுபல்லவி.

சுப்பியே யுன்னை காளந் தீண்டிய
ஒப்பி வந்ததோ ஓ ஓ விதியோ
அப்பா அப்பா அப்பா அப்பா
அப்பப்பா அப்பப்பா அப்பப்பா
அப்பப்பா (அப்)

சரணம்.

பாவி யாக்கி யென்னை பாக்க விட்டாயோ
கூவித் தாயென்றே குரலு மற்றாயோ
ஆவிப்போகும்போது அம்மா அம்மாவென்றுமே (அப்)

S. V. சுப்பையா பாகவதர் பாடிவரும்

இராகம்-பைரவி—தாளம்-ஆதி.

பல்லவி.

ஸ்ரீரகுவர சுகுணலையா ராம
சாசித லோசன வீரோசனுப (ஸ்ரீ)

அநுபல்லவி.

தானலேனி பாகு லேடிகி
பிரான நனுப்ரோ வக ராதாவாத (ஸ்ரீ)

சரணம்.

ஆகம மூல அவனித லோல
வேகமு தெலுசுகோ தியாகராஜநுத (ஸ்ரீ)

ஸ்வரம்.

பதநி சரிதப நிதப மகரி காம பதநி
தபத நிசநிதனி ரிசனி தப மகரி
கமபத நிசா நிதப தப மப மக
ரிமகரி சரிகம ரிகம பாதப (ஸ்ரீ)

இராகம் சாவேரி—தாளம்-ஆதி.

பல்லவி.

சன்யா சம் சன் மார்க்கம்
சமரச மொடுபல விடபல புகழே (சன்)

அநுபல்லவி.

பொன்னார் பயன் பெறும் என்னார் தவ யோகம்
பொன்னார் நவநிலை தன்னு லறியுஞ் (சன்)

சரணம்.

பொன்னெனிர் பூஷண பொக்கிஷ வாழ்க்கை
பொருந்து மிவையெலாம் நிலையிலா ஆக்கை
சொன்ன லடியவர் பெரும் புகழ் வாக்கை
சுதந்திர மெனக்கொள்ளுஞ் சித்தர்கள் சேர்க்கை (சன்)

பிளேட் No. 3068.

இராகம்—ஆனந்தபைரவி-செஞ்சுருட்டி.

சிதம்பரம் போகாமல் இருப்பேனே நான்
ஜென்மத்தை வீணாக கழிப்பேனோ நான் (சித)

பக்தியும் மனமும் பொருந்தினதங்கே
சத்தியம் சொன்னேன் சடலமும் இங்கே (சித)

ஆசையும் நேசமும் ஆனந்த மங்கே
பேசலும் பிதற்றலும் பாசமும் இங்கே (சித)

மதுரை M. M. தண்டபாணி தேசிகர்,

N. E. 13. இராகம்-கானடா—தாளம்-ஆதி.

திருப்புகழ்.

எருவாய் கருவாய் தனிலேயுருவாயிதுவே
பயிராய் விளைவாகி
இவர்போ யவரா யவர் போயிவரா இதுவே
தொடர்பாய் வெறிபோலே
ஒரு தா யிருதாய் பலகோ டியதா யுடனே
யவமா யழியாதே
ஒருகால் முருகா பரமா குமரா
உயிர்காவென வோதருள்தாயே
முருகா வெனவோர் தரமோ
தடியார் முடிமேலிருதாள் புனைவோனே

முனிவோ ரமரோர் முறையோ வெனவே
முதுசூரருமேல் விடுவேலா
திருமால் பிரமா அறியாதவர் சீர்
சிறுவா திருமால் மருகோனே
செழுமா மதில்சே ரழகார் பொழில்சூழ்
திருவீழியில்வாழ் பெருமாளே.

கள்ளபார்ட் சக்ரவர்த்தி

A. M. கார்மேகம் ஆச்சாரி பாடிவரும்

பிளேட் No. 3685. காமிக்.

கோலா கலமான லீலைக்கதிகாரியே
கொக்கோக கைக்காரி யே—அடி (கோ)

நாலாவித யோகம் மேலாய் புரிந்திட
நானுனையே தேடியே நங்கையே வந்தேண்டி (கோ)

தொகையரு.

சந்தனமும் குங்குமாவும் தனி புனுகும் ஜவ்வாதும்
அந்தமுடனே பூசி அழகான பஞ்சணை மேல்
எந்தனையே யந்தணைவாய் இந்த நல்ல நேரத்தில்
எனை யணையே

பாட்டு.

செந்தமிழ் கார்மேகம் தமிழே—உன்
செவியிற் கேட்டுமே மகிழே—அடி (கோ)

விருத்தம்.

மானே உனக்கென்று நான் பட்ட பாடு வருத்தமெல்லாம்
நானே எடுத்துறைக்க வென்றால் திங்கள் நான்கு செல்லும்
கானகம் பற்றும் கடல்நீறு வற்றும் கருங்கல் பெருகும்
ஏனோ என் மீதில் இத்தனை கோபம் என் யேந்திழையே (கோ)

ஆர்மோன்யம் A. S. ராஜப்பா புதிய பிளேட்

கழுகுமலை கதிர்காமம் கந்தபிரான் பேரில் பாடுவது

இராகம்-தேசிகதோடி — தாளம்-ஏகம்.

பல்லவி.

கந்தையா நானுனக்கு மகனல்லவா
கனவானே குணவானே திருக்கழுகுமாமலைக் கடவுளே (கந்)

மகுடங்கள்.

கருத்திலொரு வருத்தமதை
தவிர்த்தருளும் திருத்தணிகை குழந்தை (கந்)
கானக் குறமகள் மருவிய
யானைக்கொரு முகந் தழுவிய (கந்)
கர்த்தனே மலரடி தஞ்சம்
உத்தமியனுதினங் கொஞ்சும் ரஞ்சித (கந்)
ஆறுமுக குகாவுனைவிட வேறுகதியில்லை (கந்)
அந்தரங்க வித்தை மேவும் அமிர்தா (கந்)

அநுபல்லவி.

என் தாயு மானவனே
இன்பம் பொங்கும் செந்தூர்ப்ரமானந்தனே (கந்)

சரணம்.

ஏழை முகம் பாரய்யனே
ஏது சூது மீது கோபமா
மாகதநிற கழனிதனில் நடமிடும் பழனி
கந்தமலர்ப் பாதமதிலே யானந்தந்தான்—சதா
காலமெல்லாம் போற்றுவதுன மைந்தன் தான்
இது செஞ்சொற் நாகமுத்து சந்தந்தான்
செப்புஞ்ஜெய வெள்ளைச்சாமி சொந்தந்தான்
க்ருபையருள் மெஞ்ஞான (கந்)

ஆர்மோன்யம் கவாய்

K. T. நடராஜ பிள்ளை பாடிவரும்

(புதிய தெம்மாங்கு)

சதுரகிரி மலையோரம்
சார்ந்திருக்கும் திருகு கள்ளி
திருகுகள்ளி பூ வெடுக்கத்
திரிந்தேனடி சில காலம் (சது)

திருமால் பதி யோரம்
இருபிரிவாம் நீரோடை

கருமணியே வூற்றிரைக்க
உருகுரேண்டி கண்ணாளே (சது)

ஒருத்திக் கொருவனடி
உன்னை நம்பி வந்தவண்டி
பெருமை குலேக்காதடி
பெண்ணே நீயும் வருவாயடி (சது)

மதுரை, பபூன் N. S. ஷண்முகம் புதிய பிளேட்.

இராகம்-பியாக்—தாளம்-சதுஸ்ரம்.

பல்லவி.

சென்னை ராஜக்குட்டி என்
சீனி சக்கரைக் கட்டி வாடி (செ)

அநுபல்லவி.

அன்னமே சீமாட்டி உனக்கட்டிகை மயிர்மாட்டி
உயர் மின்னு ஜப்பான் சீட்டி
மேல் பூட்டிக் கோடி பியூட்டி வாடி (செ)

உங்கப்பனை போய்க் கேட்டேன்
ஒப்பந்தம் வாங்கிப் போட்டேன்
தப்பவிட மாட்டேன் குட்டி
தாலி பண்ணி போட்டேன் வாடி (செ)

தஞ்சை சண்முக சாமி உன்
தனுக்குக் கேற்ற சாமி தமிழ்
செஞ்சொற் கூடற் பூமி இதில்
சேர்ந்த பாலு சாமி வாடி (செ)

கள்ளபார்ட் சக்ரவர்த்தி

A. M. கார்மேக ஆசாரி பாடிவரும் புதிய பிளேட்

பாட்டு.

அம்மாளு உங்கம்மாளுக்கு மருமகப் பிள்ளையடி
தங்கம் பிள்ளையடி சொந்த மருமகண்டி
வெப்பாரும் ஒப்பாரும் மைத்துனண்டி
வெம்மாளும் ஓம்மாளும் நாத்தியடி
தப்பாது நானுனக்கு மச்சாண்டி
இப்போதே தாலியைக் கட்டுவேண்டி (அம்)

கட்டுவெத்திலே தாரேண்டி
எட்டுப் பாக்குத் தாரேண்டி
டப்பிச்சுண்ணும்பு தாரேண்டி
போட்டுக்கூட வாயேண்டி
காமத்துடிக்காரி யுன்னைத் தாண்டி
இனி யுனக்கென்ன வேணுண்டி மாமனைக் கேளடி
போடி உங்கத் தாயார் சொன்னா நான்
பெரிய மனுஷன் வீட்டுப் பிள்ளையல்லவா
உனக்கு மாமனல்லவா பல் (அம்)

முதலில்லா வியாபாரக்காரனுட மகனல்லவா
நானே சிங்காரண்டி நானே ஒய்யாரண்டி

நானே கெம்பீரண்டி நானே கார்மேகண்டி
நாக்குலே மூக்குலே நத்துப் புல்லாக்குலே
பேச்சுப்பராக்குலே சொல் ஜோக்குலே
டாஸ்கு டப்பா டோபல்ஷா வயதிளமடி
நல்லா பாருத்தியாடி குட்டி நல்ல மருந்தடி
தேகமெலிந்து தேஜஸ் குறைந்து
செல்வங் குறைந்திங்கவே (அம்)

ஷியார் பாடிவரும் புதிய பிளேட்

நம்பிக்கை கொண்டேல்லோரும் என்ற மெட்டு.

பல்லவி.

தகத்திங் கிணத்தோ மெனவே தில்
லாணு பாடுவோம்—தில்
லாணு பாடுவோம்—தில்
டோமரி யாடுவோம்—பல். (தக

அநுபல்லவி.

சுகம் பெறும் வழியதைத் தேடு—உன்
அகமகிழ்வாகவே கூடு—இச்
ஜெகமதில் புகழ்ந்திடும் விகசிதமயிலே நீ
சேர்வாயன் போடு—பல் (தக

மாமதன் திருவிளை யாட்டு—உன்
மாமனை மருவிப்பா ராட்டு—தக
மதிவிதாண கவி ததிபுகல் கார்மேகம்
மணம் போல் மணஞ்சூட்டு—பல் (தக)

நான்கு-ஐந்து பாகங்கள் முற்றிற்று.

47877

புத்தக விளம்பரம்.

ஒரிஜினல் புதிய பிளேட் கிராமபோன் பாட்டுகள் 5-பாகம் அடங்கியது	விலை அணா	0	8	0
T. K. சுந்தரம் கீர்த்தனை 2-பாகமும்	விலை அணா	0	12	0
நாட்டுத்திலகமென்னும் ராட்டுப்பாட்டு	விலை அணா	0	4	0
K. B. சுந்தராம்பாள் பாடிய புதிய பிளேட் பண்டித மோதிலால் நேரு கிராமபோன் பாட்டு 1, 2, பாகங்கள் பாகம் 1-க்கு	விலை அணா	0	2	0
மாஸ்டர் வாய்ஸ் & கொலம்பியா கீதங்கள்	விலை	0	2	0
மதுரை பபூன் N. S. ஷண்முகம் பாடிவரும் ஒரிஜினல் புதிய பபூன் பாட்டு 1, 2 பாகங்கள் பாகம் 1-க்கு	விலை அணா	0	2	0
குணங்குடி மஸ்தான் பாடிய வேதாந்தக்கீர்த்தனை		0	2	0

மேல்கண்ட புஸ்தகங்களும் இன்னும் வேண்டிய இதர புஸ்தகங்களும் மொத்தமாகவும், சில்லரையாகவும் வியாபாரிகளுக்கு விலை சவுகரியமாகவும் கீழ்கண்ட விலாசதாரிடம் V. P. மூலமாய் பெற்றுக்கொள்ளலாம்.

விலாசம்:—

ஸ்ரீமுருகன் புக் டிப்போ,

புதுமண்டபம், :: மதுரை.